# திறவுகோல்

2052 வைகாசி
மாத இதழ்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – தடுப்பூசி



ரா. ராஜராஜன்,
மன்னை

காலரா என்பதை "காலன் வரான்" என்பதாக அழைத்ததையும் அதன் பாதிப்புகளையும் வரலாற்றின் வழியாக அறிந்திருந்த நமக்கு, இன்று அந்த சூழலை நேரடியாக அனுபவிக்கும் நிலையை இந்த கொரோனா பெரும் தொற்று நமக்கு ஏற்படுத்தியுள்ளது. அன்றைய காலரா காலத்தில் இந்திய நிலப்பரப்பின் மக்கள் தொகை சுமார் 20 கோடி பேர், அதில் சுமார் 1.5 கோடி மக்களை நாம் காலராவிற்கு பலிகொடுத்தோம். இதற்கு முக்கிய காரணம் அன்றைய சூழலில் அம்மக்களுக்குதனது வாழ்விடத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற புரிதலும் விழிப்புணர்வும் இல்லாதது.

ஒருவேளை அன்றைய சூழலில் அவர்களுக்கு அந்த விழுப்புணர்வு இருந்திருந்தால் அந்த1.5 கோடி மக்களின் உயிரிழப்பையும் அதனை தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியையும் அவர்கள் தவிர்த்திருப்பார்கள். அதேபோல் தான் இன்றைய நிலையும். இன்று இந்த கொரோனா சூழலை விழிப்புணர்வுடனும் அலட்சியம் இல்லாமலும் அணுகினால் தான் இந்த கொரோனா பரவல் சங்கிலியை நம்மால் உடைக்க இயலும். அதற்கு நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து செயலாற்ற வேண்டிய சூழலில் இருக்கிறோம், இல்லையெனில் அதீதமான உயிரிழப்பையும்அதனை தொடர்ந்து கணக்கிட இயலாத பொருளாதார இழப்பு மற்றும் அதனை சார்ந்த தனி மனித உளவியல் சிக்கலையும் நாம் சந்திக்கும் சூழல் ஏற்படும்.

இது ஏதோ பீதியாக தெரியலாம். ஆனால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய உண்மை. அன்று காலரா காலத்தில் எப்படி சுகாதாரத்தை பற்றிய விழிப்புணர்வு இல்லையோ அதே போன்று இன்று விழிப்புணர்வற்ற மற்றும் அதனையும் மீறிய அலட்சியம் நம்மிடம் இருப்பதாக தெரிகிறது. இதனை உணர்ந்து ஒவ்வொருவரும் பொறுப்புடன் இணைந்து செயல்பட வேண்டிய காலத்தில் நாம் உள்ளோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இதிலிருந்து மீள இன்று நம் முன் இருக்கும் ஒரே வாய்ப்பு அரசு மற்றும் மருத்துவர்கள் சொல்வதை கேட்டு அவற்றை கடைபிடிப்பது மட்டுமே. அது தான் ஓர் சிவில் சமூகத்திற்கான பொதுவான வாய்ப்பு. இங்கு ஒவ்வொரு தனிமனிதனின் அலட்சியமும் அடுத்தவரை பாதிக்கும் சூழல் உள்ளது. அதனால் அறிவார்ந்த பொது சமூகமாக அனுவரும் சேர்ந்து செயல்பட்டு இந்த தொற்றிலிருந்து வெளிவர வேண்டும். அது தான் பண்பட்ட சமூகம் செய்ய வேண்டியது, குறிப்பாக நம்மை போன்ற வரலாற்று சிறப்பு

மிக்க தமிழ் சமூகம் செய்ய வேண்டியது. நாம் இவ்வளவு காலம் உயிர்ப்புடன் இருக்கிறோம் எனில் இதற்கு முக்கிய காரணம், இதுபோன்ற இக்கட்டான சூழலில் அனைவரும் ஒன்றிணைந்து அதிலிருந்து மீண்டு வந்தது தான். அவ்வாறாக தான் நாம் வரலாற்றில் இன்றும் தனிதன்மையுடன் இருக்கிறோம். நமக்கென்று இல்லை உலகம் முழுவதும் இது தான் நிலை. இப்படிதான் பல நாடுகள் கொரோனோவிலிருந்து மீண்டுள்ளன.

அது எப்படி அந்த நாடுகளிலெல்லாம் சாத்தியம் ஆகிற்று, அவர்கள் எவ்வாறு கொரோனாவிலிருந்து மீண்டார்கள் என்றால், அரசு சொல்வதை மக்கள் ஒன்றிணைந்து முறையாக கடைப்பிடித்தார்கள்அதேபோல் அரசும் அதற்க்கு தேவையானவற்றை சரியாக செய்தது. என இரண்டு தரப்பும்இணைந்து செயல்பட்டதன் விளைவு அவர்கள் இன்று கொரோனாவிலிருந்து மீண்டு வந்துள்ளார்கள். இன்று ஏக இந்தியாவில் இது சாத்தியமா எனில் கண்டிப்பாக இல்லை என்றேதோன்றுகிறது, ஏனெனில் முதலில் முன்னின்று செயல்பட வேண்டிய மத்திய அரசு எங்கிருக்கிறதுஎன Missing போட்டு தேடும் சூழல் தான் ஏக இந்தியாவில் இருக்கிறது. ஆக அதனை விடுத்து, தமிழகம் எப்படி இந்த பெரும்தொற்றிலிருந்து மீள வேண்டும் அதற்க்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை தான் பார்க்க வேண்டும்.

புதிதாக பதவியேற்றுள்ள இந்த அரசின் முன்னுள்ள மிகப்பெரிய சவால் கொரோனவிலிருந்து மக்களை மீட்பது தான். அதை நோக்கி தான் அவர்களின் செயல்பாடும் உள்ளதாக தெரிகிறது, இங்கு அவர்களுடன் இணைந்து ஒவ்வொருவரும் செயல்பட்டால் மட்டுமே இந்த பெரும் தொற்றிலிருந்து மீள இயலும்.

அதற்கு என்ன செய்ய வேண்டும்?

1. அலட்சியம் காட்டாமல் தேவையின்றி வெளியில் செல்வதை நாம் நிறுத்த வேண்டும். இதனால் ஏற்படும் வருமான இழப்பை கொஞ்சமேனும் ஈடுசெய்யும் வகையில் அரசு மக்களுக்கு மாதமாதம் நிதி அளித்திட வேண்டும்.

2. வெளியில் செல்லும்பொழுது கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். மூச்சு விட சிரமம் இல்லாதவர்கள் ஒன்றுக்கு இரண்டு முக கவசம் சேர்த்து அணிந்து கொள்ள மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

3. தனிமனித இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். கூட்டமாக இருக்கும் இடத்திற்கு செல்வதை தவிர்த்திட வேண்டும்.

4. கைகளை அடிக்கடி கிருமி நாசினி கொண்டு கழுவ வேண்டும். வெளியில்

சென்றால்கூடுமானவரை எதையும் தொடாமல் இருக்க முயற்சிக்க வேண்டும்.

5.சத்தான உணவு பொருட்களை உட்கொள்ள வேண்டும்.

மேற்சொன்ன அனைத்தும், பெருவாரியான மக்களுக்கு தெரிந்து விழிப்புணர்வு பெற்று உள்ளனர் இருந்தாலும் இந்த விஷயங்களில் ஓர் அலட்சியம் அனைவருக்குள்ளும் உள்ளது. அந்தஅலட்சியதத்தை விடுத்து அனைத்தையும் கடைபிடித்தால் தான் இந்த பெரும் தொற்றிலிருந்து நாம்வெளியேற இயலும்.

இறுதியாக இன்னொரு விஷயம் தடுப்பூசி, இதில் பெருவாரியானோருக்கு புரிதலோ, விழிப்புணர்வோ இல்லை என்றே சொல்லலாம். இதனை அரசும் முன்னின்று செய்திருக்க வேண்டும் ஆனால் செய்யவில்லை. இனிமேலாவது செய்யட்டும். இன்று கொரோனாவிலிருந்து மீண்ட நாடுகள்முக்கிய காரணியாக சொல்வதில் ஒன்று தடுப்பூசியும் தான்.

உலக சுகாதார அமைப்பு பொதுவாக தடுப்பூசிகளுக்காக சொல்லியுள்ள அனைத்து ஆய்வுகளையும்செய்து அதற்க்கான ஆய்வு சான்றுகளை சமர்ப்பித்து அதன்பிறகு ஒப்புதல் பெற்ற தடுப்பூசிகள் தான் இன்று மக்களுக்கு செலுத்தப்படுகின்றன. இதேபோல் ஆய்வு முடிவுகள் சமர்ப்பித்துநிராகரிக்கப்பட்ட நிகழ்வுகளும் இங்குள்ளன. ஏனெனில் அவைகள் முழுமையாக விதிகளுக்குட்பட்டுநிரூபணம் ஆகவில்லை என்பதால்.

பொதுவாக தடுப்பூசிகள், முதல்கட்ட சோதனையில் சிறு விலங்குகளை கொண்டும், அடுத்தகட்ட சோதனையில் சுமார் 20 நபர்களை கொண்டும் , அடுத்தகட்ட சோதனையில் சில நூறு நபர்களை கொண்டும், அடுத்தகட்ட சோதனையில் சில ஆயிரம் நபர்களை கொண்டும் சோதனை செய்து, அதன் நோய் எதிர்ப்பு குணம், நோயிலிருந்து மீட்க்கும் வலிமை, குறுகிய கால பக்கவிளைவுகள் எனஅனைத்தையும் ஆராய்ந்து அவற்றின் முடிவுகளின் வழியே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இங்குஇறுதி சோதனை என்பது நீண்டகாலத்தில் ஏற்படும் பக்கவிளைவுகளை ஆராய்வது. இதற்க்கு சிலஆண்டுகள் பிடிக்கும் ஆனால் அதற்க்கான நேரமின்மையால் இந்த தடுப்பூசியை உடனடியாக அனைவருக்கும் கொடுக்க அனுமதி அளித்துள்ளனர்.

தடுப்பூசி என்றில்லை, நாம் இன்று எடுக்கும் ஒவ்வொரு மருந்தும் இந்த 4 கட்ட சோதனைக்கு பிறகு ஒப்புதல் அளிக்கப்பட்டதும், நமக்கே தெரியாமல் மருத்துவர்களின் மூலம் நமக்கு கொடுக்கப்பட்டுசில ஆண்டுகள் பக்கவிளைவுகள் இருக்கிறதா என ஆராய்ந்து, இருப்பின் அதனை சரி செய்துஅதன்பிறகு தான் அனைவருக்கும் கொடுப்பார்கள். ஆனால் அதற்கு குறைந்தபட்சம் 2 ஆண்டுகளும்அதிகபட்சமாக 10

ஆண்டுகளும் ஆகும் என்கிறார்கள் மருத்துவர்கள். இவ்வாறாக தான் இந்த மருத்துவம் வளர்ந்து வந்துள்ளது. நிகழ்காலத்தில் உள்ளவர்களின் வழி சோதனை செய்து எதிர்காலத்து மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் இந்த கொரோனா பெரும்தொற்று காலத்தில் இறுதி கட்ட சோதனை செய்து வெளியிடும் அளவிற்கு ஆண்டுக்கணக்கான காலம் இல்லாததால் நேரடியாக அனைவருக்கும் வழங்கக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. இதுபோன்ற பெரும் தொற்று காலத்தில் உயிர்களை காப்பாற்ற வேறு வழியில்லாத்தால் அனைவருக்கும் செலுத்த அனுமதித்துள்ளனர்.

இந்த தடுப்பூசி போட்டால் மரணம் வருகிறது என்ற சந்தேகம் உள்ளது. குறிப்பாக விவேக்கின் மரணம். இதில் சரிசம வாய்ப்புகள் இருக்கின்றன. மறுப்பதற்கில்லை. தடுப்பூசியினாலும் அவரது மரணம் ஏற்பட்டிருக்கலாம், இல்லாமல் வேறு காரணங்களாலும் ஏற்பட்டிருக்கலாம். அதே நேரத்தில் உலகம் முழுவதும் தடுப்பூசிகளால் இரத்த உறைதல் ஏற்பட்டு அதன் மூலம் உயிரிழப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. 10 லட்சம் பேர் தடுப்பூசி எடுத்துக் கொண்டால் அதில் 116 நபர்களுக்கு இரத்தம் உறைதல் பிரச்சனை ஏற்படுவதாகவும் அதில் 3 பேர் இறப்பதாகவும் மருத்துவ புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

இது ஒரு இக்கட்டான போர்சூழல், இங்கு கேடயம் போல தடுப்பூசி இருக்கிறது. இன்று தட்டம்மைமுற்றிலுமாக ஒழிக்கப்பட்டதெனில் அதற்கு முக்கிய காரணம் தட்டம்மை தடுப்பு மருந்து தான், இதுவரை உலகளவில் தடுப்பு மருந்தால் அதிக அளவு மரணித்தவர்களும் தட்டம்மை தடுப்புமருந்தால் மரணித்தவர்கள் தான். ஆனால் அதனை சரிசெய்து இன்று முழுவதுமாக நாம் தட்டமை உயிரிழப்பு இல்லா சூழலை எட்டியுள்ளோம். அன்று அந்த தடுப்புமருந்தை மக்கள் போடாமல்இருந்திருந்தால் இன்றும் தட்டம்மை மரணத்தை நாம் எதிர் கொண்டு இருப்போம்.

அதேபோல் தடுப்பூசி போட்டுக்கொண்டாலும் கொரோனா வருவது ஓர் பின்னடைவாக பார்க்கப்படுகிறது. ஆம் தடுப்பூசி போட்டுகொண்டு நாம் முறையாக முக கவசம், கை கழுவுதல், சமூகஇடைவெளி போன்றவற்றை கடைபிடிக்கவில்லை எனில் கண்டிப்பாக கொரோனா வரும் தான், ஆனால் அவ்வாறு வந்தாலும் அதனால் ஏற்படும் உயிரிழப்பை இந்த தடுப்பூசி கட்டுப்படுத்தும் என்பதுமருத்துவர்களால் நிறுவப்பட்டுள்ளது.

அடுத்ததாக மாற்று மருத்துவம் என்று தடுப்பூசியை முற்றிலுமாக ஒதுக்கும் போக்கும் இன்றுள்ளது. மாற்றுமருத்துவத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அதன்வழி நோய் எதிர்ப்புசக்தியை கூட்டிகொள்ளுங்கள், ஆனால் அது உயிரிழப்பை தடுக்குமா என்றால் கண்டிப்பாக தடுக்காது, என்ற புரிதல் நமக்கு வேண்டும். இன்று நம்மிடம் இருக்கும் மாற்று மருத்துவம் என்பது "வருமுன் காப்பது" தான், ஒருவேளை வந்துவிட்டால் அதன் வழி உயிரிழப்புகளை காக்கும் மருத்துவம் இன்று இந்தகொரோனா சூழலில் இல்லை

என்பது தான் உண்மை. இன்றும் மாற்றுமருத்துவம் என பேசும்அனைவரும் திடீரென உடலுக்கு ஏதாவது எனில் ஓடி செல்வது அலோபதி மருத்துவமனைக்கு தான் என்ற எளிய புரிதல் நம்மிடம் இருக்க வேண்டும். இது மாற்று மருத்துவதை எதிர்தரப்பில் வைத்து பேசும் சூழல் அல்ல. அறிவியல் துணைகொண்டு கொரோனாவை ஒழிக்கும் சூழல். பல்லாயிர ஆண்டாக நம்முடைய மனித சமூகம் முன்னோக்கி நகர்ந்ததை விட கடந்த 200 ஆண்டுகளில் நாம் அறிவியல் துணைகொண்டு செய்த பாய்ச்சல் அந்த பல்லாயிரம் ஆண்டு வாழ்வைகடந்த 200 ஆண்டுகளில் தாண்டிய பாய்ச்சல். அது அறிவியலால் தான் சாத்தியம் ஆகியது. அந்தஅறிவியல் தான் இன்று பல உயிர்காக்கும் சிகிச்சையையும், பல தடுப்பூசிகள் மூலம் பலநோய்களிலிருந்து நம்மை காத்து வருகிறது.

சமீபத்தில் ரஜினி அவர்கள் தடுப்பூசி எடுத்துக்கொண்டார், அவருக்கு பல உடல் பிரச்சனைகள் உள்ளது, அத்தனையையும் மீறி தடுப்பூசி எடுத்துக்கொண்டார். ஏன் அவரால் தனியாக வீட்டிலேயே இந்த தொற்று முடியும் வரை இருக்க இயலாதா , அவருக்கு அந்த வசதி வாய்ப்புகள் இல்லையா. இருக்கிறது இருந்தும் தடுப்பு ஊசி எடுத்துக்கொள்கிறார், தன் உடலில் இவ்வளவு பிரச்சனைகள் இருந்தும் அதனை மீறி அறிவியல் மீதுள்ள நம்பிக்கையால் எடுத்து கொள்கிறார், அதில் அவரது குடும்பத்தினர் மீதுள்ள அக்கறையும் உள்ளது. அதேபோல் அவரை நம்பி திரைப்படதொழிலில் ஈடுபடும் தொழிலார்கள் மீதுள்ள அக்கறை. அவர் ஒரு படம் நடித்தால் அதன் பொருட்டு பல குடும்பங்களுக்கு வருமானம் கிட்டும். அந்த குடும்பங்களின் வருமானத்திற்கு ஏதோ வகையில்அவரால் ஆன ஒரு முன்னெடுப்பு இது.

இவையில்லாமல் இப்படி ஒரு பொது பிம்பம் தடுப்பூசி எடுத்துக்கொள்ளுதல் என்பது ஏனைய பொதுமக்களுக்கு ஒரு விழிப்புணர்வாக இருக்கும். இதே ரஜினி தான் தமிழக அரசின் போலியோ விளம்பர தூதராக இருந்து போலியோ தடுப்புமருந்தை பலர் எடுத்துக்கொள்ள உந்துதலாக இருந்தவர். விளைவு இன்று போலியோவை நாம் முற்றிலும் கட்டுப்படுத்தியுள்ளோம். அதற்கு ரஜினியும் பெரும்பங்காற்றினார். அதேபோல் தான் கொரோனாவிற்கு வாசலில் நின்று விளக்கேத்திய ரஜினி, தாளம் போட்ட ரஜினி, இன்று அரசு தடுப்பூசியை அறிமுகப்படுத்தியதும் முன்னின்று போட்டு கொள்கிறார்.

ரஜினி போட்டு கொண்டால் நாம் எதற்கு போட்டுக்கொள்ள வேண்டும் என்ற கேள்வி உடனடியாக தொக்கி நிற்கும், அவர்களுக்காக நம் வரலாற்றில் நம் தமிழ் மன்னர்களின் வாழ்க்கையில் ஒரு சிறுவாழ்வியலை சொன்னால் இன்னும் எளிமையாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு அரசனுக்குமகன் பிறந்து அந்த மகனுக்கு 4 வயது ஆனதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உணவில் நஞ்சை கலந்து கொடுத்து வருவார்களாம். அவ்வாறு கொடுக்கும் விஷத்தினால் பல எதிர்வினைகளும்

பக்கவிளைவுகளும் தொடர்ந்து அந்த குழந்தைக்கு ஏற்பட்டு கொண்டே இருக்குமாம், ஆயினும் அவற்றையும் மீறி விஷத்தை கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்து கொண்டே வருவார்களாம், ஏனெனில் அந்த குழந்தைக்கோ அல்லது அது வளர்ந்து இளவரசனாகவானாலும் அரசனாகவோஇருந்தாலும் சிறுவயதிலிருந்தே எதிரி மற்றும் துரோகிகளால் கொள்ளப்படும் சூழலே மிகுந்துஇருக்கும். அவ்வாறு கொள்வதற்கு முதன்மையாக பயன்படுத்தும் பொருள் விஷம். உணவில் விஷம் வைத்து கொள்வது, விஷம் தோய்ந்த கத்தி, அம்பு போன்றவற்றை கொண்டு கொள்வது, பாம்புபோன்ற விச ஜந்துக்கலால் ஏற்படும் உயிரிழப்பு என பெருவாரியாக விஷத்தினால் கொல்லப்படுவதை தடுக்க. அவர்கள் உடலில் 4 வயதிலிருந்து சிறுக சிறுக விஷத்தை தடுப்பு மருந்தாக கொடுத்து அந்த உடலை எந்த விஷமும் தாக்காமல் அதனை எதிர்த்து போராடி உயிரிழப்பிலிருந்து மீட்குமாம். அன்று அவர்கள் 4 வயதிலிருந்து விசத்திற்கு பழக்கவில்லை என்றால் இன்று வரலாற்றில் இருக்கும் பெரும் மன்னர்கள் வரலாறு படைப்பதற்கு முன்பேஎதிரிகளால் கொள்ளப்பட்டிருப்பார்கள். அந்த விச தடுப்பு மருந்தின் இன்றைய வடிவம் தான் தடுப்பு ஊசி.

இன்றைய சூழலில் நாம் அனைவரும் உயிரோடிருத்தல் தான் மிக முக்கியமான விசயம், ஒரு உயிரிழப்பு வெறுமனே அந்த ஒரு தனி மனிதருடன் போவது அல்ல, அது அந்த குடும்பத்தை நிர்மூலமாக்கும், அவர்களை சார்ந்த மனிதர்களின் பொருளாதார வீழ்வை ஏற்படுத்தும். அதே போல் ஒட்டுமொத்தமாக பார்த்தால் நாட்டின் மனித வளம், உற்பத்தி, பொருளாதாரம் என அனைத்தையும்ஆட்டம் காண செய்திடும்.

பிறகும் உங்களுக்கு தடுப்பூசி மீது நம்பிக்கையில்லை எனில் உங்கள் மருத்துவரை சந்தித்து ஆலோசியுங்கள் அப்படியும் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை எனில், அந்த நம்பிக்கையின்மையை அடுத்தவர்களிடம் கடத்தாதீர்கள், அதேபோல் உங்களை சார்ந்தை யாரும் இல்லை என்ற சூழலையும் அதனூடே ஏற்படுத்திடுங்கள்.

அதேபோல் பிற உடல் உபாதைகள் இருப்பவர்கள் மருத்துவரின் அறிவுறுத்தலை பெற்று தடுப்பூசியை எடுத்துக் கொள்ளுங்கள்.

அரசு சொல்வதை கேட்போம்! அதேபோல் தடப்போம்!! ஒற்றுமையாக கொரோனாவிலிருந்து மீள்வோம்!!!

நன்றி,
ரா. ராஜராஜன்,
மன்னை.

# வசியநிறச்சாறு

மிகக் கனமழைப் பொழியும்
கார்முகிலென விழுந்து
பேரன்பின் அருவியாய்
நுரைப்பூக்கள் சரிந்து
தழைத்தயென் வனங்களுக்குள்
நதியெனக் கடக்கிறாய்
தீராத் தனிமையில்
மௌனத்தின் மீதமர்ந்து
கூடிக்களித்த வசந்தத்தை மோகித்துப்
பகலையும் இரவையும்
கருணையற்றுத் தின்றுச்செரிக்கிறேன்
உன் கொலுசொலிகள் உதிரும் வாசம்
என் நாசியை நெருங்கவில்லை
கண்களில் வடிகின்றது
உன் புன்னகையின் வசியநிறச்சாறு!

# சந்திப்பின் தொடர்கதை

பிரியத்தின் தித்தைப்பைக்
கசாயமாய் விழுங்கி
உடைந்த புல்லாங்குழலின்
கண்ணீர் இசையை
ஒவ்வொரு முறையும்
தீயென நிரப்பி
மனமின்றி பிரிகிறாய்...
தூரம் சென்று
சாலையின் வளைவில்
ஒருமுறை கையசைத்து
நீ வீட்டைச்சென்றடைந்த பின்னும்
அடுத்த சந்திப்பிற்குக்
குதுகலத்தோடு ஆயுத்தமாகும்
முன்னும்
ஆரவாரத்தோடு  பெருங்கதை பிதற்றி
வாலாட்டித் தொடர்கிறேன்
உன் இனிய நான்!

# வெட்கங்களின் பூந்தூறல்

உன் நறுமணம் நிறைந்து
உயிர்மூச்சை இனிப்பேற்றும்
பேரழகின் அறையில்
பட்டாம்பூச்சியாய் நுழையும் நான்
மலர்கொண்ட மென்மார்பில் மோதி
துறுதுறு தேன்சிட்டாகி
பஞ்சவர்ணக்கிளியாய்
வெளியேறுகிறேன்
வானமெங்கும் பொழிகிறது
உன் வெட்கங்களின் பூந்தூறல்!

# ஒத்திகை

இருள்கவ்வும் அந்தியில்
சுடர்மங்கிச்சாயும் வெய்யோனாய்
தனித்து உழல்கிறேன்
துயரப் பிரிவினைச்
கூரிய கனைகளால் மோதி
நிரந்தர விடைபெறுதலுக்காய்
வெக்கை மிகுத்து
ஒத்திகைப் பார்க்கிறாய்
வானில் மெல்லத்தேய்கிறது
பூரண நிலா!

# கூந்தல் பூக்கள்

நீயற்ற வெளியில்
தனித்தயென்  பயணம்
இரவுப்பறவைகள் ஓயாமல் கீச்சிடும்
இருளடர்ந்த குகைவாசம்

மௌனத்தின் சாவியால்
சிறைப்படும் நான்
கண்டறிதல் எளிதற்று
நரகத்தில் புதைகிறேன்
வழியெங்கும் உன் கூந்தல் பூக்கள்
சருகாகிக் கிடக்கின்றன
சத்தியமாய் சாத்தியமில்லை
மூன்றாம் நாள்
வியப்பூட்டும் என் உயிர்த்தெழல்!

–
பொன். தெய்வா
ஜவேலி.





அட்டைப்பட
ஓவியம்:

இரா.மதுவர்ஷினி,
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்.

# ஞாபக நெரிசல்

பச்சை தாவணியில் நிற்பவளை
எங்கோ பார்த்திருக்கிறேன்
பாதி முகத்தில் யோசிக்கிறேன்
மீதி முகத்தில் வார்த்தையில்லை

நன்கு பழக்கப்பட்ட உருவகம்தான்
மெய்ம்மறந்த சிறு அசைவு
பேருந்தில்

இதழோரம் மினுங்கும்
தழும்பிலிருந்து
தாழம்பூ வாசம் வருகிறது

நெற்றி சுருக்கிய தீவிரத்தில்
குருவியின் கொண்டை நிறம்
குறுக்கு வெட்டில்

நெஞ்சுக்குழியின் ஞாபகத்தை
கழுத்திருக்கி உள்ளேயே
திணிக்கிறது கூட்டம்

நெரிசலில் சிக்காத மறதியை
யார் யாரோ வைத்திருக்கிறார்கள்
ஞாபக நெரிசல் வண்ணமற்றது

தும்மலில் குனிந்து நிமிர்ந்த போது
பச்சை தாவணி
மஞ்சளாகி இருந்தது...!

–
கவிஜி




T.ஷாலினி
ஜெயங்கொண்டம்

# நீண்ட இரவு விடிந்ததும்

முடியக் கூடும்.
என் பயணமும் நிச்சயம்
ஓர்நாள் முடிந்து விடும்.
முடிவில்லா பாதையின்
பயணம் என்றும் முடியாதது.

கிராமத்துக்காரி
முந்தானையில் சில்லறையை
முடித்துவைப்பதுபோல்;
சொற்களைச் சேமித்து வைக்கிறான்.
சொற்களின் சுகமும் வலிமையும்
தெரிந்த கவிஞன்.

தேன் கொடுக்கப் பூவும்
அதை எடுக்க வண்டும்
இருந்தால் போதுமானது.
அவ்வமயம் எதுவும் யாரும்
தேவையில்லை.

கிராமத்து பிள்ளைகள்
நகரத்திற்கும்.
நகரத்து பிள்ளைகள்
கிராமத்திற்கும்.
புலம் பெயரும்
அந்நாளில்தான்
குதூகலம் அடைகிறது
கோடைவிடுமுறை நாட்கள்.

கோவிலில்
மூலவரைத் தரிசிக்க
தர்மதரிசனம்
விரைவுதரிசனம்
சிறப்புதரிசனம்.
எந்தத்தரிசனத்திலும்
மாறவில்லை
சுவாமியின் தரிசனம்

குழந்தைகள் விளையாடிய
சொப்புக்குள்ளிருந்து
அள்ள அள்ளக் குறையாத
அட்சயபாத்திரமாய்
வந்து கொண்டேயிருக்கிறது
குழந்தைகள் சமைத்த
வகைவகையான உணவுகள்.

பயணக்களைப்பு
கோவிலில்
சாமியை பார்க்கும்
முன்னமே
உறங்கிப்போனது
குழந்தை.
சிரித்துக் கொண்டிருக்கிறது
உறக்கத்தில்.
குழந்தைக்கு மட்டும்
கனவில் சாமியின்
சிறப்புத்தரிசனம்.

பசியிலிருந்த பிள்ளைகளுக்கு
பந்தியிட்டு விருந்து வைத்தேன்.
பசியடங்கிய பிள்ளைகள்
முகத்தில் ஆனந்தம்.
பந்திக்கு முன் பிள்ளைகள்
பசியில் வாடியதை
பத்துப்பக்கங்களுக்கு
மேலெழுதியும் தீரவில்லை
கவிதை.

ஏணி போட்டு
ஏறினாலும்

எட்டாத உயரத்தில்
யார் வைத்தது
வானத்தில்
வெள்ளித்தட்டை.

குடித்து முடிக்கிறாய்
குளிர்பானம்.
தாகம் தணித்து
பெருமூச்சு விட்டு
ஆசுவாசமடைகிறது
குளிர்பான பாட்டில்...!

நாடகம் முடிந்து
வேடம் கலைத்தப்பின்னரும்
மன்னர் தோரணையிலிருந்து
இன்னும் மீளவே இல்லை
குழந்தை.

ஊர் மொத்தமும்
நீரருந்திய குளம்
இன்றதன் தலைக்கு மேல்
சுமந்து கொண்டிருக்கிறது
மேநீர்த் தேக்கத் தொட்டியை...!

காக்கையின்
கூடுமிருக்கிறது.
குருவியின்
கூடுமிருக்கிறது.
வீடு வந்து சேராத
பறவைகளை நினைத்து
தாய்மனதோடு
தவிக்கின்றது மரம்.

என் அளவுகடந்த
ஆனந்தத்தையும்,
சொல்லவொன்னா
துயரத்தையும்,
என்னிடம் பகிர
எத்தனித்து என் கைப்பேசி
எண்ணினைத் தொடர்பு கொள்ள
விழையும் போதெல்லாம்
என் கைப்பேசி பயன்பாட்டில்
இருப்பதாக அறிவிக்கிறாள்
பெண்ணொருத்தி.

ஞானம் வேண்டி
போதிமரத்தின் கீழ் தவமிருக்கும்
நவீனபுத்தன் தலையில்
முளைத்திருக்கிறது
கிளைக் கிளையாய்க் கொம்புகள்.

- கவிதைகள் ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353.



# காகிதம்

துண்டுசீட்டுகளாய்
உருட்டி விளையாடுகிறார்கள்
பெயர் எழுதி....!

எழுத வரும்
விரல் நுனியில்
சிந்தும் துளிகளை
அள்ளி முடிக்கிறாய்...!

உன்னுடல்
கீறப்படும்போது
ஆயிரம் வார்த்தைகள்
ஜனிக்கின்றன...!

உன்மீது
தூரிகைகள் விழ
அழகான ஓவியங்களை
பெற்றெடுக்கிறாய்..!

ஊடலுக்குப்பின்
களமிறங்கிய
பேனாமுனை
பிழையின்றி
பேசுகிறது உண்மையை...!

மிதித்து
விளையாடியவர்கள்
மதித்து
எழுதுகிறார்கள்
அறிவியல்
உண்மையை...!

வெறுமனே
பயணிக்கிறாய்

குழந்தையின்
புத்தகப்பையில்
எழுதும் வரை...!

கட்டுகட்டுகளாய்
மறைந்திருந்த
எழுத்துகளோ
கச்சிதமாய்
உன்மீது
பயணிக்கின்றன...!

வார்த்தைகள்
முட்டுகின்றன
விழியோரம்
திகைத்தோட
பந்துகளாய்
குதித்தோடுகிறது
உன் மைதானத்தில்
வார்த்தைகள்..!

வெண்மை பூசியதால்
சாயம் வெளுக்கிறதோ
திட்டுதிட்டுகளாய்
அங்காங்கே
ஊதாப்பூக்கள்...!

உன்னை
கோபத்தில்
கிழிக்கையிலே
சேர்ந்தே
மலர்கின்றன
கவிதைப்பூக்கள்...!

உன்மீது
அணிவகுத்த
கோடுகள்
பூக்கின்றன

வார்த்தைகளாய்....!

சிறகுகள்
முளைத்துவிட்டதோ
காற்றோடு
காதல் கொண்டாயே
உன்னுடல் அசைவில்
பட்டங்களைப் பெற்றதோ
ஆகாயம்..?

வீசி எறிகிறார்கள் உன்னை
வேண்டாத கயவர்கள்
குப்பை தொட்டியும்
முணுமுணுக்கின்றனவே
பெற்ற பிள்ளைகளாய்..!

காதலர்கள் கொண்ட
காதலோ...?
சிலநேரங்களில்
இரத்தகறையில்
எழுதுகிறார்கள்
உன் மீதேறி...!

தாயின் கண்ணீரையும்
சுமக்கிறாய்
அயலூர் சென்ற
மகனிடம் நலம்
விசாரிக்கிறாய்..!

விபூதியும்
தஞ்சமடைகிறதே
உன்னிடம்...
கடவுளின் தீட்சை
கிடைத்ததோ?

உன்மீது விழுந்த
கிறுக்கல்கள்
சிரிக்கின்றன
திருத்த ஆள்
இல்லையே என்று...!

குப்பையில்
கசங்கி விழுகையிலே
காகிதம் பொறுக்குபவனின்
வயிறு நிறைகிறது...!

வரலாற்று சுவடுகள்
மட்டும் தடங்களாய்
இன்னமும்
பரிணமிக்கின்றன..!

எழுத்துகளின் வலிமையை
உரக்கச்சொல்லும்
கா கி த மே
காத்து கிடக்கிறது
கவியின்கிறுக்கல்கள்....!
உடல் தாங்கி
ஏற்றுக்கொள்...!
உயிர்மூச்சாய்
உலவட்டும் உன்மீது....!

–

ஞா.முனிராஜ்,
அருப்புக்கோட்டை

**பொம்மையொன்றை**
**தொலைத்து** விட்டு அழும்
குழந்தைக்காக
மனித வேடத்தை கலைத்து
பொம்மை வேடமிட்டேன்
மகிழ்ச்சியாக இருந்தது
சில நிமிட வாழ்க்கை!

***

**உழைப்பாளர் தின**
வாழ்த்துக்கள்
சொல்ல வீட்டுக்குப் போனேன்...
விடுமுறை நாளில் கூட
ஓய்வெடுக்காமல்
வேலைக்கு சென்றுவிட்டாள்...
அம்மா!

***

**நதிக்குள் பறக்கிறது...**
வானில் நீந்தும்
பறவையின் பிம்பம்!

***

**பொது வெளியில்**
தமிழ் தமிழென
மூச்சு முட்டப் பேசுகின்றவர்களின்
பிள்ளைகளெல்லாம் தவறாமல்
படித்துக்கொண்டிருக்கிறார்கள்...
ஏதேனும் ஒரு ஆங்கிலப்பள்ளிகளில்!

***

**புதிதாய்**
குருவி கட்டிய கூட்டில்
குடியிருக்கிறது...
குழந்தைகளின் மனது!

***

**உன்னை நினைவுப்படுத்தும்**
ஒவ்வொன்றும்
ஊசியாய் தைக்கிறது...
உன் மரணத்தின் பின்னொரு
நாளில்,
நாங்களெல்லாம் நடைபிணமாகி
விட்டோம்,
இப்போது வலிப்பதில்லை!

***

**தன் இணையைத்**
தொலைத்துவிட்டு
இரவெல்லாம்
தேடிக்கொண்டிருக்கும் பறவையின்
சோகத்தினை
காண முடியாமல் மேகத்திற்குள்
ஒளிந்து கொள்ளும் நிலவாகவே
இருக்கிறேன்,
உனக்குள் நிகழும் சோகம்
பிரிவு துரோகம் காயமென
ஏதோ ஒன்றில்
துடித்துக்கொண்டிருக்கும்
போதெல்லாம்,
என்னை நானே தொலைத்தபடி!

***

## நாளொன்றிற்கு ஒரு கவிதையேனும்

எழுத வைத்துவிடுகிறார்கள்...
என்னை கடந்து போகும்
குழந்தைகள்,
குழந்தைகளை பார்க்கவும்
பேசவும் முடியாத நாட்களில்
தேடிக்கொண்டிருக்கிறேன்...
அர்த்தமற்ற எனது வாழ்விற்கான அர்த்தங்களை!

***

## மதுக்கடை

நிரம்பி வழிகின்றது...
ஏழை குடும்பங்களின் சாபங்கள்!

***

## ஒவ்வொரு சடலங்களையும்

புன்னகையோடு
வரவேற்கும் வெட்டியான்,
குழந்தைகளின் சடலம்
வரும் நாட்களில்
உலா வருகிறான் நடைபிணமாய்!



--
மு.முபாரக்

# ரகசியம்

ரகசியம் பொருந்திய
என் அகரூபத்தில்
பூட்டியிருக்கும் கதவுகளுக்குள்
பிரபஞ்சத் துகளின் சப்தங்கள்

ஒவ்வொன்றாய் அனுபவித்து
நித்திரையில் ஓர் மறதி
மீண்டும் விழித்துத் துளிர்க்கும்
கால முடிச்சுகளில் ஓர் அரவணைப்பு

பஞ்ச பூத பெரு விழிப்பில்
ஓர் நகர்வு
கோடி யுகங்களின் சாலையில்
என்றுமே பேரமைதி
ஆளற்ற அந்தரத்தில் ஆடுகிறது
துகள் விரியல்

அனுமதியில்லாமல்
என் அகரூபம் திறந்தது
தெரிந்ததோ வெளி
என் ரகஸியம் கரைக்கப்பட்டது
இப்பொழுது
எல்லாம் திறந்தே இருக்கிறது.
--

# பூமி எனும் மேசைமீது

அருந்தும் விருந்தாளிகளே
விரித்து வைக்கப்பட்டுள்ள
அனைத்தும்
கருகிவரும்
தரிசுநிலத்தைப்பாருங்கள்
நீர் வந்த வாய்க்கால்களில்
காய்ந்து போன
ஒரு கூழாங்கற்களோடு
நீர் சேர்ந்த பாடல் ஒன்று
கேட்டுக்கொண்டேயிருக்கிறது
எனக்கு
ஒரு மலரின் வருத்தமான
குரல் கேட்கிறது
அழித்துக்கொண்டே
புனிதப்படுத்துவதாகப் பேசும்
மனிதனுக்குள்
எத்தனை வறண்டு போன
பள்ளங்கள்
அதில் நீரை நிரப்புகிறேன் நான்
ஒரு இலையைப் பார்ப்பதற்கு அல்ல
ஒரு விதையை அறுவடை செய்ய
அற்புதமான ஒளியில்
சில விதைகள் மண்ணை
முட்டித்தள்ளட்டும்
மண் அழகான நிழலில்
இளைப்பாறட்டும்
இதயம் மரத்தின் நிழல்போல்
பூமியை முத்தமிடட்டும்.
--

# மலர்களுக்கு ஓர் ஆலாபனை

உன்னை புணர்ந்துறிஞ்சும்
சிறு சிறு பூச்சிகளின்
புளங்காகித இடுக்குகளில்
ஒரு தேனீர் மழை

அழகான சூரியன் சொட்டும்
ஒளியை உறிஞ்சும்
உன் இன்ப குழலில்
ஓர் உடல்நதி

என் தோட்டத்தில்
விரிந்து கிடக்கும் ரோஜாவே
கூந்தல் காடுகளில்

உன் மௌன உற்சவம்

விக்ரகத்தில்
ஓராயிரம் இதழ்களின்
தெய்வீக புன்னகை

வண்டின் ஆழ் மௌனத்தின்
மேடைகளில்
இந்திர நடனம்

உன் ஆடையிழந்து
பூக்களின் வெளியில்
ஓர் நிர்வாணம்.
--

## எனக்குள் இருக்கும்

இரண்டு மனிதர்களைச் சந்திக்கிறேன்
வேறொருவன் அகிம்சையைப்
போதிக்கிறான்
அவன் சிலநேரங்களில்
நான் ஆவதுண்டு

நான் என்பவன் இறந்து
இறந்து பிறக்கிறான்
இப்படியே
நீயும் வந்துவிட்டாய் எனக்குள்
நீ வந்தபிறகுதான்
கையாள்வதற்குச் சிரமப்படுகிறேன்
எனக்குள் நானையும்
எனக்குள் நீயையும்
எவ்வித பாகுபாடின்றி
நிகழ்த்த நினைக்கும் பொழுது
மீண்டும் சிரமப்படுகிறேன்

இரண்டு பேரையும் விட்டு
வெளிவந்த போது
பைத்தியக்காரன் என்கிறீர்கள்
உங்களைப் பார்த்துச்
சிரித்துக்கொண்டே
கடந்து செல்கிறேன்
கடலைப்போல்.
--

## பாறையை உடைப்பதாய்

புறப்பட்ட சொற்கள் இன்னும்
தொடவில்லை அதன் அணுக்களை

மௌனமாய் காத்திருந்த காகிதத்தை
அசைத்துப் பார்த்து
திசை தெரியாமல் நின்றுவிட்டது
அசைவுகள்

கால் பதிந்து
அதிரும் மண் விட்டது
பெரு மூச்சு
அதன் முடிச்சுகள் அவிழாமல்
அதில் ஒரு நித்தியம்

தட்டி தட்டி உடைந்த பாறையின்
உச்சியில் அமர்ந்த பறவையின்
இறகில் ஒரு சாந்தி

சொல்ல முடியவில்லை
அந்தப்பறவையால்
இதுதான் வாழ்வென்று
இதுதான் திசையென்று

கூடு விட்டுக் கூடு பாயும் ஒருவனுக்காக
எத்தனையோ சவங்கள் காத்திருந்து
எரிந்துபோனது
அந்த நெருப்பிற்குத் தெரியுமா
இந்த மண்ணிற்குத் தெரியுமா

வாழ்வின் பிரதிகளைப்பற்றி

பார்த்துகொண்டிருக்கும் பித்தன்
மனிதர்களை
அகாலத்தால் அணைக்கிறான்
அதில் சிறு சிறு வாழ்வின் கீற்றுகள்
இருளில் இசைத்து
ஒளியைக் குடிக்கிறது.
–

## அதிர்வு

மழையும் வெய்யிலும் தணிந்து
சுழல்கிறது
ஆபிஸ் வாழ்க்கை மரணத்தில்
ஜனிக்கிறது
அதிசயம் அனைத்தும்
மனிதர்களை உற்றுப்பார்க்கிறது
லேசான காற்றில் மிதந்த
இறகை அசைத்துப்போட்டது புயல்

காற்றுக்கு உயிர் கொடுக்கிறான்
நீரைக் கடல் நீராக்கினான்
வெப்பத்தைச் சுமந்து
நிலத்தின் பக்கங்களில்
பாதத்தால் எழுதித் தீர்த்து
ஆகாயத்தை நோக்கிய வழிகளில்
வழிகிறது
கருணையின் கரு

மனதில் சிறைப்பட்டுப்போன
கடவுளுக்கு
உருவங்கள் நிரம்பி நின்றது
தேடிய வழியெங்கும்
வழிதெரியாமல் மடிந்துவிடுகிறது
கண்கள்

ஒவ்வொரு விதையிலும்
மறைந்துள்ள உயிரானது வெளி

சீராக ஓடிக்கொண்டிருக்கும்
பெரு வெளியின் இயக்கத்தில்
மனம் தடுமாறி
காயங்களின் தீண்டலோடு
புனிதத்தின் சுடர் ஏற்றி
சொற்களைச் சிதைத்து எரியவிடுகிறது

புனிதம் மறைகிறது
மனம் அதிர்கிறது
காலத்திற்கு வடிவம் கொடுத்த
கடிகாரம் துடித்து துடித்து பெருஞ்
சுணை சொற்களோடு இசைக்கிறது.
--

## என் காடுகளை மேய்ந்திடும்

பெருஞ்சுவர் நீங்கள்
கடித்தெடுக்கும்
உங்களுக்கான ஈரச் சொற்களை
சேமித்துவைத்திருக்கிறேன்
நீங்கள் கொடுத்ததோ
இதழற்ற ஒரு காம்பு மட்டும்
நான் பூத்து இடமடைத்து
காம்படைந்து
நறுமணம் தந்து
ஒளிர்கிறேன்
கொஞ்சம் இளைப்பாறி
இதழ் உடையாது
மலர்ந்து வீசுங்கள்
காடு குளிரட்டும்
உங்கள் பெருஞ்சுவர் இடியட்டும்.
--

## தூரத்துப் புன்னகையை
தினம் தேடும்
மௌன கால்வாய்களின் வழியே
தினம் தொடுகிறேன் உன்னை

இதய நாரில்
ரோஜா வனங்களைத் தொடுக்கிறேன்
மெல்லக் கவிகிறது இதய இதழ்கள்

இதய நாதத்தின் அதீத ராகம் மெல்ல
நகர்ந்து உன் கூந்தலில்
வெடித்தெழுகிறது

உன் காருண்ணிய பார்வையில்
ஜீவன் ஒடுங்கி
கடுவெளியில் ஜால மருந்தை
திரட்டுகிறது

உன் ஸ்படிக ரேகை மெல்லப் படர்ந்து
என்னைக் கட்டிப்போடுகிறது

உன் பிரவாகத்தில்
மோகன அக்கினி ததும்பி வழிகிறது

பூக்களில் முட்கள் செய்யும்
உன் அழகு ரூபத்தின் முன்
சமுத்திரமாய் விழுங்குகிறது
குருதியின் மிச்சத்தை சதை பிளவுகள்

இதய வானத்தில் எதிரொலிக்கிறது
வண்டின் குரல்கள்

மௌனம் கரையும்
காதல் சமுத்திரமெங்கும்
அரூபத்தின் குரல்களாய்
மடிகிறது கனல்.

--

## இருளின் அகாலத்தில்
வெளிச்சத்தின் ரேகைகள்
மிச்சமிருக்கிறது

இருளின் ஊடேயிரங்கும்
விண்மீன் தடயத்தை
விழுங்கி நகர்கிறது இருள்

நிலவு படகு கால நதியில்
திசை மறந்து சூரியனின்
மற்றொரு முகமாய் மலர்கிறது

அணுக்களின் துயிலற்ற பயணத்தில்
ஆழமான மௌனமாய்
நிலவு பூ பூக்கிறது பூமியெங்கும்

நிலவும் சூரியனும்
பூத்துக்கொண்டேயிருக்கும்
சூனிய சக்கரத்தில்
பிறந்து பூத்திருக்கிறது
பிறப்பு
இறந்து பூத்திருக்கிறது
இறப்பு
மலர காத்துக்கொண்டேயிருக்கிறது
உயிரெனும் மலர்.

--

## பிரபஞ்சத்தின் கணங்கள்
பூமி சதைகளில் ஒரு மௌன அதிர்வு
சுழலும் அச்சில்
ஒரு ஆழமான புன்னகை
அதிசயமான உடல் இசை
தட்டாய் சுழல்கிறது

நீர் தெறிக்கும் இசை மோதி மடிகிறது
உடலெங்கும்
பூமித்தாயை பிளக்கும்
விதைகளில் இருக்கிறது
பச்சை சதையுதடு

பூமி இருள் குடித்து
பகல் அருந்தி வழிகிறது
மணித்துளிகள்

சாயை கோடுகளில் புறப்பட்டு
நடந்து செல்கிறது பூமி
துணைக்கு சில கோள்களின்
ரீங்காரம்

கோள்களைப் பெற்றெடுத்த
கருவறையா பிரபஞ்சம்
மனித மனதில் எரிகிறது
பிரபஞ்ச விளக்கு

மாயை எண்ணெய்யானது
சாயை திரியானது
இரண்டும் கலந்து மனித உயிரானது

கடந்து செல்ல முனையும்
கோள்களை
கட்டிவைத்துள்ளான் மனிதன்
மனக் கயிற்றைக் கழட்டி எரிந்தால்
ஒளியின் தூரத்தில் தெரிகிறது
முத்திரை

மனித மூச்சில் வழிகிறது
அணுதானியம்
அணுக்களைக் குடித்து மகிழ்கிறது
வெகுதூரத்தில் கருந்துளை.

ப.தனஞ்ஜெயன்
*9751800333.*





நிரஞ்சனா கபிலன்,
*375 தெற்குதெரு, மாங்கொட்டை நத்தம், வல்லூர், மன்னார்குடி 614017.*

# அப்துல் கலாம்

அறியாமையின் இருள் போக்கிய அறிஞனாய்!!!!
ஆளுமையின் கறை நீக்கிய ஆசானாய்!!!!
இந்தியாவின் வளர்ச்சியின் இறைவனாய்!!!!!
ஈகையுறு பண்பின்
ஈசனாய்!!!!!
உலகம் போற்றும்
உத்தமராய்!!!!!
ஊக்கமுறு கருத்து களின் ஆசிரியராய்!!!!
எளிமையின் இலக்கணம் கற்றாலும்
ஏற்றமிகு வளர்ச்சி
தந்த விஞ்ஞானியாய்!!!!!
ஐம்பூதமும் உனை வணங்கும் அதிசயமாய்!!!!
ஒற்றுமையின் உருவம்
தந்து
ஓங்கி உயர்ந்த புகழின்
உன்னத தலைமகன்!!!!!

அன்புடன் ....
ச.அருள் பிரசாத், B.com CMA MDA DTL
(GST practitioner)
சிராங்குடி



# பறவை நீரருந்த

நீர்ப்பரப்பில் உண்டாகிறது
முத்தமிடும் காதல் சோடிகள்

மாலைச் சூரியன்
மொட்டைப் பனையின்பின் அமர
வண்ண வண்ண ஓலைகள்

சன்னலின் வழியே
கரையும் காகம்
பறந்து போனது பசி

தேர்தல் நாள்
எனக்காக பிரச்சாரம்
பாட்டோடு குயில்

அந்தி சாயும் வேளை
மீனவன் இழுக்கும் வலையில்
சிக்கி மீளும் சூரியன்

மனிதர்கள் பேசாவிட்டாலென்ன
மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறான்
நாய்களோடு பேசும் பித்தன்



–
சா.கா.பாரதி ராஜா,
*38-3, கைலாசநாதர் கோயில் தெரு,*
*பெரிய நத்தம்,*
*செங்கல்பட்டு - 603002.*
*+91 9944315732*

# விட்டில் பூச்சிகள்.... !

மீண்டும்...!
கொரோனாவின் கோரத்தாண்டவம்..!

இரண்டாம் அலையாய் உலகில்..!
அரக்கனாய் இந்தியாவில்...!

ஆக்கிஜன் இன்றி  பரிதவிக்கும்
நோயாளிகள்...!

நிரம்பி வழியும் மருத்துவமனைகள்...!
எரிக்க  இடமின்றி சுடுகாடுகள்...!
நின்று போன திருமணங்கள்...!

கூடி அழ முடியா இறப்புகள்...!
வெறிச்சோடிய வீதிகள்...!
மூடிக்  கிடக்கும் கடைகள்....!
ஆளில்லாத அலுவலகங்கள்....!

சீண்டுவாரில்லா பூங்காக்கள்...!
பறக்காத விமானங்கள்....!
மூட்டை முடிச்சுகளை சுமந்த
நடைபாதை மனிதர்கள் ...!

கதவை மூடிக்கொண்ட கடவுள்கள்...!
தூரமாகிப்போன உறவுகள்...!
பிழைத்திருந்தால் பார்ப்போம் -?
என்று எங்கும் பேச்சு....!?

காரணம் -
கொரோனா முதல் அலையில்..!
இங்கே பாடம் கற்கவில்லை யாரும்...?
செய்த தவறையே மீண்டும்
செய்து விட்டில் பூச்சிகளானோம்...!?

அறிவினை விடுத்து...!
இனியாவது -
மூட நம்பிக்கைகள் விடுத்து..!

அறிவியல் ஆயுதம் ஏந்தி...!
நம்பிக்கையுடன் போராடுவோம்...!

கொரோனாவை வெல்வோம்...!
ஏனெனில் -

மனிதர்கள் இல்லா உலகம்..
நம் இலக்கு அல்ல...!?

— முனைவர்.சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



# எவ்வளவு தீண்டினாலும்

ஆவல் குறையவில்லை உன்னோடு...!!

ஒவ்வொரு முறையும் ஒரு புது அனுபவம்! ஒரு புது உணர்ச்சி!

எப்படி உன்னால் மட்டும் இவ்வளவு மகிழ்ச்சி தர முடிகின்றது!!?

சில முறை வியந்து போனாலும்..
பலமுறை அயர்ந்து தான் போகின்றேன்..!!

உன்னை தழுவி அணைக்கும் ஒவ்வொரு முறையும் புதுஇன்பம் காண்கின்றேன்.!!

வேறு யாரிடமாவது இப்படி உண்டா
என்று உன்னை நினைத்து நான் கர்வமும் கொள்கின்றேன்..!!

உன்னை பலர் பலவாறு வர்ணித்து உள்ளனர்..

உன்னை தேன் என்றான் என் பாட்டன் பாரதி..

அமுது என்றான் அவன் அடியான் பாரதிதாசன்..

வெண்மையான பால் என்றான் கண்ணதாசன்..அன்னம் என்றான் பட்டினத்தார்...

நான் என்ன சொல்ல வார்த்தைகள் தேடுகின்றேன் உன்னுள்...

உன்னை போற்ற உன்னுள் வார்த்தைகள் இன்றி தவிக்கின்றேன்...

யாரிடமும் இல்லா தனி ழகரம் கொண்டாய்!!
அதுவே உன் மணிமகுடம் அம்மா!

அன்னையினும் அருந்தவம் கொண்டதால் உன் மகனாக இந்த நன்னிலத்தில் பிறப்பெடுத்தேன்..

உன்னை உச்சரிக்க தீரா ஆவல் கொண்டேன்.
உன் புகழ் பாட நான் பேசும் வல்லமை பெற்றேன்.!!
என் மூச்சு வரை உன்னை ஆராதிப்பேன்..

எனக்கு உன் அக்ஷயா பாத்திரம் ( இலக்கியம்) கிடைத்தால்.!!
உன்னை அனுதினமும் சுவைப்பேன்..

எல்லோர்க்கும் மூத்தவள் நீ
முன்னவள் நீ
ஆற்றல் மிக்கவள் நீ

உன் வழி தோன்றின் இவ்விழிகொண்டேன்!!!
இவ்விழிகொண்டு உன்னை கண்டதால்
பிறந்த பேறு பெற்றேன்!!!

என்ன பேறு பெற்றேனோ உன் மகனாக இந்த பூமியில் பிறக்க!!!

மீண்டும் ஒரு வரம் கொடு மீண்டும் எப்பிறவி பெருமினும் உன் மடியில் பிறக்க..
உன்னை அனுதினமும் துதிக்க.. தமிழ் அன்னையே...

வாழ்க நீ !!!
செழிக்க நின் புகழ்!!!

--
விருதை
கவிபாரதி. சதீஷ்

# உயிர்வளி(லி)

உயிர் வளியற்று
உயிரோடு கொலை
உயிர் வலியோடு
பற்றி எரிகிறது
சடலங்களுடன்
உறவுகளின்
வயிறுகளும்

செறிவூட்டா உயிர் வளி
மரண வலியோடு
மூச்சடைக்கிறது
எரியூட்ட மட்டும்
துணைப் போகிறது
பாழாய் போன
இந்த உயிர் வளி

பிணங்களின் மீது
ஒளிர்கிறது
நவீன இந்தியா

நுண்கிருமிகள் மென்று
துப்பிய
பிணக்குவியல்கள்

அலைமோதும்
கண்ணீர் அவலங்கள்

நடைப்பிணங்களாய்
மக்கள்

மருத்துவமனையில்
சேர்க்கப்பட்ட
உறவுகளுக்காக
ஊசலாடுகிறது உயிர்

கணவனின் உயிர்
காக்க
கடைசி ஆயுதமாய்
தன் மூச்சுக் காற்றோடு
போராடியவள்
இதயத்தில் எரிதழலாய்
இறங்கியது
இறந்தார் என்ற செய்தி

வழிதெரியாமல்
விழிப்பிதுங்கி
நிற்பவர்களிடம்
மறவாமல் வரிசையில்
நின்றுக்கொள்(ல்)கிறது
ஊழல் பணம்

உயிர் காக்க
உதவாத பணங்கள்
வீசியெறியப்படுகிறது
தெருக்களில்
பிணங்களுடன்

உயிர் வளியை
பெருக்காமல்
மயானங்களை
விரிவுப்படுத்துகிறோம்

பிணங்களோடு
மனித நேயத்தையும்
சேர்த்து
எரியூட்டுகிறோம்

களப்பணியாளர்களே
இரு கரம் கூப்பி
இறைஞ்சுகிறோம்
இனியாவது
செறிவூட்டப்பட்ட
உயிர் வளி

உருளைகளை
உருவாக்கிடுக
விரைந்து
உயிர்களைக்
காத்திடுக!!!

--

**பெ. விஜயலட்சுமி**
காஞ்சிபுரம்
6380704001





# கைகழுவிய காலம்

ஒவ்வொரு காலத்தையும்
கைகழுவி,
இன்றும் கழுவுகிறேன்,
என் இயந்திரக் கைகளை:
மெல்ல துருப்பிடிக்கிறது
இந்த வாழ்க்கை!
நான் உண்பது எதுவும்
என் உடலில் ஒட்டுவதில்லை,
நான் சுவைப்பது எதுவும்
என் நாவில் ஒட்டுவதில்லை:
இயற்கையோடு ஒட்டியிருந்தது
என் வறண்ட ஆன்மா?!
கறை படிந்த கைகளை
தேய்த்து கழுவக் கழுவ
தோலுரிகிறது - கலாச்சாரமும்
தமிழர் பண்பாடும்;
இன்னும் என் இரத்தம் வழிய
தேய்த்துக் கழுவுகிறேன்;
சுத்தம் வேண்டி போராட்டம்,
கிருமிகளுக்கு துணையாக!
மூலிகைகளை அழிக்கும்
வேதியல் மருத்துவம்!!
இதுவும் மற்றொரு
'கைகழுவிய காலம்'.

–
வெ.ஹேமந்த் குமார்,
ஈரோடு

# ஏதோ ஒன்றில்...

மௌனமாய்
மனதைத் திறக்கும்
தாவணிப் பயணங்கள்...
அதைச்
சுட்டிக் காட்டுமுன்
கால் கொலுசுகள்...

எந்தன்
சிந்தையை ஈர்க்க
சிணுங்குமுன்
கை வளையல்கள்...

நான்
பார்க்கும் போது
பாராமலும்
பார்க்காத போது
பார்த்தும்
தவிக்க வைக்கும்
ஓரப் பார்வைகள்...

கன்னத்தில்
கவிதையாய்த் தவழும்
காதோர முடிகள்...

சத்தமின்றி
காதலைச் சொல்லிட
காதினில்
தொங்கும் கம்மல்கள்...

என்னிடம்
பேசும்போது மட்டும்
படபடக்கும்
பதுமையுன் வார்த்தைகள்...

இவற்றில்
ஏதோ ஒன்றில் தான்
என்னை
தொலைத்து விட்டேன்...

–
பாக்யபாரதி
தருமபுரி,
+91 9655621199



# கவிநய தபால்

அன்றுதான் என்றும்
இன்று அதெல்லாம் இல்லவே இல்லை
சொடுக்கினால்
அடுத்த கனம் உன்னைச் சேர்ந்து விடும்
என்றுதான் சொல்லித் திரிந்தேன்
ஆனால்
அதில் உண்மையில்லை
பதினான்கு மணி நேரத்திற்கு முன்பு
போட்ட கவிநய போஸ்ட்டொன்று
இன்று மதியம் ஒரு மணிக்குத்தான்
பார்வைக்கு வந்தது
நாம் வீட்டில் இல்லாதநேரம்
தாமதமாக வரும் பழைய தபால்காரன்
முகநூலிலும்
சைக்கிள் ஓட்டி வருகிறான்
அந்தத் தபாலில் வந்த காலத்தின்
வேகத்தை காலங் கடந்து பிடிக்கிறேன்
உன்னை அறிவது தாமதமானது.
--

# பட்டாம்பூச்சி

அமர்ந்த கையில்
ஒரு கொலையாயுதம்

கொலையாயுதம் இருந்த கையில்
மேலுமொரு நவீன ஆயுதம்

மாற்றிக்கொண்டு
பரபரப்பாய்
வீதிக்கு வருகிறார்கள்

யார் சொல்லியும்
கேட்காமல்
கடந்து போகிறது
அமைதியாய்
மக்கள் நிழல் படிந்த மாலைப் பொழுது.
--

# அழாதே

கம்பீரமாய் இரு
நீ அழுதால் எல்லோரும்
அழுவார்கள்
நீ ஆம்பள சிங்கம்
நீ குல ராசாடா
நீ அழதே
என்று சொன்ன மாமா
மச்சுவீட்டு மாடியோரம்
பீடி குடித்து வருவதாக
சொல்லிப் போய்
தேம்பி விசும்பி அழுகிறார்
அவருக்கொரு
ஆறுதல் சொல்ல
அவருக்கொரு மாமா இல்லை.

–

குமரன்விஜி

# உன் குரல்

நீ பேசுவதை கேட்கும் போது
நான் பேச நினைப்பதை
மறந்து தவிக்கிறேன்
இன்னிசை மழை நீயாக
ரசிப்பவள் நானாக!

## மறதி

மறந்து போகிறோம்
மறதி எனும் பெயர் சொல்லி
நினைக்க வேண்டியவை
மறந்து நிற்கிறோம்
மறக்க வேண்டியவை
நினைத்து மறைத்து வைக்கிறோம்
ஏனோ!

## வாழ்க்கை

எந்த தடை வந்தாலும்
நிதானமற்று நீ
செயற்படாதே
துவண்ட செடியும்
ஒரு நாள் மீள
வழியுண்டு
துளிர ஆயுளுண்டு

## காதல்

கவிதை பேசும் விழிகள்
எனக்கு மட்டும்
தனித்துவ காகிதத்தில்!

## உலகம்

உலகம் ஒரு புத்தகமாக இருந்தால்
படித்து முடித்த பின்
மற்றொரு உலகம் படைப்பேன்

## அவனை தேடி

மிதந்து செல்லும்
மேக கூட்டங்களில்
என் கனவுகள் நகர்ந்து
செல்கிறது
அவன் இருக்கும்
திசை பார்த்து

--

**கனிமொழி சீனிவாசன்**

## தனிமை தான் இருந்தும்

மனம் நிறைந்திருக்கிறது
இயற்கையிடம்
சரணடைந்து விட்டேன் ......!!!!
–

மௌனம் சுமந்தலையும்
என் குரலுக்கு
கவிதைகள் தான்
அதன் செவிகள் ........!!!!
–

உன் கால்தடம் பதிக்கும்
இடமெல்லாமும்
புல்வெளிகளெல்லாமும்
நானாவேன்

உன் பாதம் தீண்டியதும்
நான் இறந்துபோகவே
வரம் ஒன்றை கேட்பேன் ...
–

தேவைப்படும் போது
நீ தேடப்படுவாய் உண்மைதான்....
ஆனால் அதுவரை
காத்திருக்க இங்கே யாருக்கும்
நேரமில்லை....!!!!

–

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்

# பூக்கள் விடும் வாசத்தை

ஊரெங்கும் பரப்புகிறது
காற்று.

கொஞ்சம் வேகக்காற்றைத்  தான்
புயலென்கிறீர்கள்.
ஆபரணமில்லை தான்
ஆனாலும் புயலடங்கியதும்
சேதாரம் மதிப்பிடுவீர்கள்.

சுழல் காற்றில்
உயரப் பறந்து தன்
தாய் மரத்தை
பார்த்து விட்டுத்
திரும்பியது சருகு.

–

ஆனந்தன்,
திருப்பூர்.



# மகளின் தந்தை பாசம்!!!

தந்தை பாசத்திற்கு ஏங்கும் மகள்,
பணத்தின் பின்னால் ஓடும் தந்தை
பாசப் போராட்டத்திற்கு பகுத்தறிவு கிடையாது!

நான் உணர்ந்தது ஆதலால் எழுத
எனக்கு உரிமை உண்டு!
தந்தையை விட்டுக்கொடுக்காத மகள், இன்றளவும் பாசத்திற்கு விலை பேசும் தந்தை!

என்ன ஒரு குடும்பம் என்று
வியக்க வைக்கும் கேள்வி
கோடீஸ்வரனின் வீட்டில் பிறந்த
மாணிக்க மகாராணி இவள்!

சூதுவாது தெரியாத பெண் இவள்
சொந்தங்களிடமே பல நேரங்களில் சோதிக்கப்பட்டவள்,
சாதிக்கப் பிறந்தவளை அன்று
சாணத்தை கையிலெடுக்க வைத்தார்கள்

சமையற்கட்டில் சண்டையிடுகிறாள் இப்போது என்னோடு
சமாதானமும் சமமுடன் பேசுவாள் என்னவள்!
என்னால் உயர்ந்தவள் இதைக் கூற
எனக்கு கர்வம் கிடையாது

எனக்குள் அவள் இருப்பதனால்
நான் ஒரு செயல் செய்ய
இறைவனை வேண்டி பன்னிரண்டு
வருடங்கள் ஆகிவிட்டது

அவள் கண்பார்வையில் எனக்கு
அத்துனையும் ஜெயமாகியது
எங்கள் வீட்டு திட்ட அலுவலர்
எங்கள் வீட்டு நிதி அமைச்சர்
சொல்லிக் கொண்டே போகலாம்


ஒன்று மட்டும் சொல்லிக்கொள்கிறேன்
மாமனாரின் காசில் மங்களம் பாடாத
மருமகனாக வாழவே எனக்கு ஆசை

மாமா உங்களுக்கு வாய்க்கரிசி போட
உங்கள் சிதைக்கு தீ மூட்ட
உங்கள் மகளையே அனுப்புவேன்

அந்த பாக்கியமாவது அவளுக்கு கிடைக்கட்டும்
புரட்சிக்காக அல்ல பாசத்திற்காக
இது சத்தியம்......

–

சா.கணேஷ் குமார்,
திருச்சிராப்பள்ளி.
தொலைபேசி எண் - 97650 55212



ஓவியம்
V. ரம்யா

# இரவுகள்

எத்தனையோ முறை
என் தலைகோதும் விரல்களானது !!
கண்ணீர் நிறைக்கவும்,
சற்று நேரத்திலே
வற்றிய குளமாக்கவும் செய்தது !!

பலவற்றை நிதானங்களில்
யோசிக்க கற்றுக் கொடுத்தது !!
பலவற்றை தேற்றி
ஆற்றுப்படுத்தியது !!

எனக்குள் என்னையே தேடச்செய்து ஒதுங்கிக் கொண்டது !!
என் கனவுகளையும்
கூடவே கண்ணீரையும்
ஒருசேர கிளரியது !!

ஒவ்வொரு நாட்களுக்கும் சொந்தமானாலும் .,
எனக்கு ஓர் அன்னைமடியாய் .,
எப்போதும் என் கவிதைகளை
தத்தெடுத்துக் கொள்கின்றன .,

"இரவுகள்" !!!

–

கவிமலர் த. சரண்யா,
கொழிஞ்சாம்பாறை,
பாலக்காடு மாவட்டம்,
கேரளா.



# வடுவூர் சிறப்பு (ஏரி)

தஞ்சாவூர் முதல் மன்னார்குடி வரையிலான முதன்மை சாலையில் திருவாரூர் மாவட்ட எல்லையில் அமைந்துள்ளது எம் அழகான ஊர் வடுவூர்.

இந்த அழகான ஊருக்கு மேலும் அழகு சேர்ப்பது வடுவூர் ஏரி
இயற்கை படைத்ததில் மிகவும் அழகான ஒன்று வடுவூர் ஏரி
316 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து காணப்படும் அழகான வடுவூர் ஏரி.

ஒரு பக்கம் பச்சை பசேலென்று வயல்வெளிகள்.
மறுபக்கம் கடல் போல் காட்சியளிக்கும் வடுவூர் ஏரி.
இதை வடுவூர் ஏரி என்று சொல்வதற்கு பதிலாக வடுவூர் கடற்கரை என்று சொல்லலாம்.

அது என்ன மாயமோ மந்திரமோ தெரியவில்லை. வடுவூர் ஏரிக்கு சென்றதுமே. என் செல்போன் தானாக என் கைக்கு வந்து. அங்கு சுற்றியுள்ள இயற்கை ரகசியங்களை படமெடுக்க துடிக்கிறது.

சுற்றித்திரியும் வண்ண வண்ண பறவைகளையும்.
நீந்திச் செல்லும் வகை வகையான மீன்களையும்.
ஊர்ந்து செல்லும் அனைத்து வகை ஊர் வனங்களையும்
நடந்துசெல்லும் மனிதர்களையும்.
வாகனம் ஓட்டிச் செல்லும் ஓட்டுனர்களையும்.
தன் அழகிய தோற்றத்தைக் கொண்டு ஈர்க்கும் எம் வடுவூர் ஏரி.

இவ்வளவு ஏன்.

ஒருவருக்கு ஒருவர் ரசித்துக் கொண்டு வரும் காதலர்களையும் தன்னை மறந்து இயற்கையின் அழகை ரசிக்க வைக்கும் வடுவூர் ஏரி.

உள்நாட்டு பறவைக் கூட்டங்கள் வெளிநாட்டு பறவைக் கூட்டங்கள் என அனைத்து பறவைக் கூட்டங்களும் ஒன்று சேர்ந்து. எம் வடுவூர் ஏரிக்கு மேலும் அழகு சேர்க்கிறது.

மாலை நேரங்களில் வடுவூர் ஏரியை பார்ப்பதற்கே தனி அழகுதான்.
ஏரியின் நடுவே அமர்ந்திருக்கும் கருவேல மரங்களில் பனிப் போர்வை போர்த்தியது போல் ஆயிரத்துக்கும் மேல் வெள்ளைக் கொக்குகள் அமர்ந்து சுற்றுலா பயணிகளின் கண்களுக்கு விருந்தளிக்கிறது.

ஏரியில் நீர் நிரம்பி இருக்கும்பொழுது மீன்கள். பறவைகள், நத்தைகள் நண்டுகள். விவசாய நிலங்கள் என அனைத்து உயிர்களுக்கும் உணவளிக்கிறது.

ஏரியில் நீர் இல்லாத பொழுது ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் உணவு அளிக்கிறது வடுவூர் ஏரி.

இந்த அழகான வடுவூர் ஏரி வடுவூருக்கு மட்டும் சிறப்பு அல்ல.
வடுவூரை சுற்றியுள்ள அனைத்து ஊர்களுக்கும் சிறப்பு தான்...

எழுதி மாளாது எம் வடுவூர் ஏரியின் புகழ்

–

CM. சிவா,
வடுவூர்.



# அம்மையாக நீ இருந்தாய்... !

அப்பனாகவும்
நீயே இருந்தாய்...!
நண்பனகவும் நீயே இருந்தாய்....!
நான் வியந்த
நாயகனாகவும்
நீயே இருந்தாய்....!

பத்துமாதம் சுமந்தால்
என்னை என் தாய்...!
ஆனால்...!
நீயே என்னை
25 வருடம்
சுமந்தாய்...!

வலியும் கவலையும் மறந்து
எனக்காய் மாடாய் உழைத்தாய்...

இன்பம் துன்பம் என்று
எல்லாவற்றையும் உன் மனதிற்குள்
புதைத்து
எங்களுக்காகவே
அயல்நாடு
சென்றாய்...

வெயிலிலும் மழையிலும்
வயல்காட்டில்
உழைத்தது போதவில்லை என்று
அயல்நாடே
சென்றாய்
எங்களை ஆளாக்கி
அழகுபார்ப்பதற்காய்...!

பசியினை மறந்து
பட்டினியாய் கிடந்து
சிறுக சிறுக சேமித்து
எங்களுக்கு உன் நினைவாய்
ஓர்
இல்லத்தை அமைத்தாய்.....

உன் தலைமகளையும்
கவலையை மறந்து
கரைசேர்த்துவிட்டாய்
எங்களை வலி தெரியாமல்
வளர்த்துவிட்டாய்....

அன்பையும் பாசத்தையும்
ஊட்டி எங்களை ஆலமரம்போல்
ஆளாக்கினாய்...

ஆண்டுகள் ஓடியது தெரியவில்லை
எங்களுக்கு
வயது போனதும் புரியவில்லை....

எங்கிருந்து வந்தானோ தெரியவில்லை
எமன்
எங்களிடம் இருந்து
உன்னை விரைவாக
அழைத்து செல்ல....

என்னை வளர்த்த உன்னை
வாழவைத்து அழகு பார்க்க
நினைக்கையிலே
என்னை விட்டு
பிரிந்துவிட்டாயே
அப்பா.....!

என் வாழ்கையில் இழக்கமுடியாத
பந்தமே மறக்கமுடியாத
சொந்தமே

நீ தானே அப்பா.....!

உன்னை பிரிந்து
இன்றோடு ஏழு வருடம்
ஆகிவிட்டது ...

மறு ஜென்மம் ஒன்று
இருந்தால்
அப்பிறவியிலும்
உன் மகனாய்
பிறக்க வரம்
வேண்டும் அப்பா.....

மண்ணறையில் நீ
உறங்கினாலும்
எங்களின்
மனஅறையில்
வாழ்ந்து கொண்டுதான்
இருக்கின்றாய்....

என்றும் உன்
நினைவுகளுடன்
நாங்கள்....

–
கண்ணீருடன்
அன்பு மகன்...
S.S.கார்த்திக், DCA,DME
உள்ளிக்கோட்டை



# அன்றாட வாழ்வில்...

இவ்வுலகம் இயங்குவதால் மட்டுமே நிலைபெற்றிருக்கிறது.

இயங்குகிற வல்லமையைத் தருவதையே நாம் இறை நிலை என்கிறோம்.
அன்றாட வாழ்வில் நாம் ஒவ்வொருவர் வாழ்விலும் சந்திக்கும் மனிதர்களை சிந்தித்து இருக்கிறோமா?அலைபேசியும் அலுவலகமும் இயந்திரங்களாய் நம்மை இயக்கும் பொழுது சிந்திக்க நேரம் ஏது?இதுநாள்வரை இல்லாவிடினும்... இன்றிலிருந்தாவது...

மனதில் நின்ற வினாக்களை முன் வைக்கிறேன்.

காலையில் எழுந்தது முதல் கண் அயரும்வரை உறவில்லா எத்தனையோ முகங்களில் உழைப்பு...

உரிய நேரத்தில் நாம் தேனீர் பருக உறக்கம் தொலைத்த பால்காரரின் நேரங்களை...

நாம் யோசித்திருக்கிறோமா?
உலகத்தையே தன் இரு சக்கர வாகனத்தில் செய்தித்தாள்களாய் சுமந்துவரும் விற்பனையாளரின்...

உளவியல் நாம் அறிந்தது உண்டா?
நம் இல்லம் தூய்மையாகத் தெருவைக் குப்பை ஆக்குகிறோம். தன் ஆடை அழுக்கான பொழுதும், வீதியின் தூய்மைக்கு வித்திடும் துப்புரவுத் தொழிலாளர்களை கையெடுத்து வணங்க வேண்டாம்.

கடந்து செல்லும் தருணங்களில் கூட ஒற்றைப் புன்னகை உதிர்த்து இருப்போமா?

உணவிற்காக விளைச்சல் செய்து தரும் விவசாயிடம்

உற்பத்திப் பொருளுக்காக விலை நிர்ணயிக்கும் நாம், அவர்களின் உழைப்பின் நேரத்திற்கு விலை நிர்ணயித்திருக்கிறோமா?

வாழ்க்கை சுமை மறக்க:
வாடாத மலர் விற்க;
புன்னகை பூக்க
பூ விற்கும் பெண்ணிடம்

பேரம் பேசாமல் ...
பூ வாங்கியது உண்டா?

பெரிய தொழில் நிறுவனமோ
அல்லது உணவகமோ
அல்லது பல்பொருள் அங்காடியோ எதுவாக இருந்தாலும் சரி
வாசற்கதவைத் திறந்து
வாகனம் நிறுத்த வழிகாட்டி
வணக்கம் கூறி
வரவேற்கும் வாயில் காவலரிடம்
தலையசைத்துச்செல்கின்ற நாம்... வரும்வரை... நம் உடமையை காத்திருந்த
அவரின் கடமையை எண்ணி கைகுலுக்கி வாழ்த்தி இருப்போமா?

இல்லை நம் வாகனத்தை எடுக்கின்ற ஆர்வத்தில் கடந்திருப்போமா?

இவற்றில் நாம் எதை அதிகமாக செய்திருக்கின்றோம்?

அறிவு நிலையில் வளமாக வாழ்பவர்கள் உயர்ந்தவர்கள் என்றும் உடலுழைப்பில் வாழ்பவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற நோக்கும் நம்மிடையே மாறினால் ஒழிய சமூக மாற்றம் பெறாது...

உடைமையும் வறுமையும் ஒரு வழி
நில்லா" (வெற்றிவேற்கை - பாடல் 49) செல்வமும் ஏழ்மையும் ஒருவரிடத்தில் நிலையாகத் தங்குவது இல்லை....

"மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது"
( ஆத்திச் சூடி - பாடல் 73)

இது நாம் அறியாதது அல்ல;
இவை எல்லாவற்றிற்கும் மேலாக:

"உருவு கண்டு எள்ளாமை வேண்டும்
உருள்பெருந் தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து"
(குறள்- 667)

என்கிறார் வள்ளுவர் மிகப் பெரிய தேரின் இயக்கத்திற்கு அச்சில் இருக்கும் சிறிய ஆணியே இன்றியமையாதது. உருவில் சிறியதாக இருந்தாலும், இது இல்லை எனில்

தேர் ஓடாது... அது போல

நமக்கேத் தெரியாமல் நம் அன்றாட வாழ்வில் கலந்து நிற்பவர்கள் உழைப்பாளிகள்...

இவர்களை நாம் இயக்குகிறோமா?
இல்லை

இவர்களால் நாம் இயங்குகிறோமா?
சிந்திப்போமாக!

மே தின வாழ்த்துக்கள்

முனைவர் மு.ஜோதிலட்சுமி,
எம்.ஏ. (தமிழ்) எம்.ஏ. (ஓகம்), எம்.ஏ. (மொழியியல்), எம்.ஃபில்.பி.எச்.டி. நெட், செட்,
இணைப்பேராசிரியர்,
தமிழாய்வுத் துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி - திருச்சி
தமிழ்நாடு.
09486416706

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ணூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

+91 8220567322

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal    ThiravukolMagazine